# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# STC. No.292/2025 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முகமது ரியாஸ் | த–பெ | முகமது அலி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 34/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | மெடிக்கல் ரெஃப் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026**

**எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்படுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து மெடிக்கல் ரெஃப் பணி செய்து வருகிறேன். 25.10.2018 அன்று நான் காரைக்குடி காலேஜ் ரோட்டில் உள்ள வைரம் மெடிக்கல் கடையில் இரவு 8.30–9.00 மணியளவில் இருந்த போது சம்பவ சாலை அருகில் அரசு பேருந்து ஒன்று அந்த வழியாக வந்து சம்பவ நேரத்தில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த அப்பாஸ் என்பவர் மீது மோதி விபத்தை ஏற்பத்தியது. அதில் அப்பாஸ் என்பவருக்கு பின்னந்தலையில் காயங்கள் ஏற்பட்டது. அவரை காரைக்குடியில் உள்ள காவேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அவரை சேர்த்தோம். மேற்படி பேருந்து ஓட்டுநரை சம்பவ சமயத்தில் நான் பார்க்கவில்லை. மேற்படி அப்பாஸ் என்பவரின் பெற்றோருக்கு விபத்து பற்றிய தகவல் சொன்னேன். மேலும் காயம்பட்ட அப்பாஸ் என்பவரை மேல் சிகிச்சைக்காக மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்கு அனுமதித்தார்கள். அந்த விவரம் எனக்கு தெரியும். மருத்துவமனையில் போலீசார் விபத்து குறித்து என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சாலையில் பேருந்து மற்றும் சைக்கில் எந்த திசையில் இருந்து எந்த திசைக்கு வந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. வைரம் மெடிக்கலில் 2, 3 நபர்கள் இருந்தார்கள். சம்பவ சாலை 2 பேருந்துகள் செல்லக்கூடிய அகலமான சாலை என்றால் சரிதான். காயம்பட்ட நபருடன் நண்பர்கள் 2, 3 பேர் வந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் விபத்து நடந்தவுடன் அனைவரும் வந்தார்கள். நானும் அதன் பின்னர் தான் சென்றேன். காயம்பட்ட நபர் எனது உறவினர் என்றால் இல்லை. சம்பவயிடத்தில் 10, 15 கடைகள் இருந்தது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.10 17:42:03 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**STC. No.292/2025 P.W.5**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஜாகிர் உசைன் | த–பெ | ஜலாலுதீன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 56/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | பழக்கடை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026**

**எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்படுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து பழக்கடை வைத்துள்ளேன். 25.10.2018 அன்று இரவு 7.00–8.00 மணியளவில் பள்ளிவாசலில் தொழுவதற்காக சென்று விட்டு வீட்டிற்கு சென்று விட்டேன். அப்போது எனது தெரிந்த அப்பாஸ் என்பவரின் தாயார் வீட்டிற்கு வந்து அவர் தனது மகன் செக்காலை ரோடு வைரம் மெடிக்கல் அருகில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது அரசு பேருந்து அவர் மீது மோதி விபத்தை ஏற்பத்தியதாகவும். அதனால் அவருக்கு காயங்கள் ஏற்பட்டு காரைக்குடி KMC மருத்துவமனையில் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக சொன்னார்கள். மேலும் அவரை மேல் சிகிச்சைக்காக வேலம்மாள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரிந்து கொண்டேன். அங்கியிருந்த எனது நண்பர்களிடம் கேட்ட போது மேற்படி அப்பாஸ் சைக்கிளில் சென்றதாகவும், பேருந்து அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும் நான் தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தது எப்படி என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.10 17:42:10 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.